**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.221/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.1 |
| Name | : | புஷ்பராணி |
| Father's Name/Husband Name: | | செல்லதுரை |
| Village | : | கூத்தனூர் |
| Taluk | : | ஆலத்தூர் |
| Age | : | 38/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.06.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் நர்சிங் படித்துள்ளேன். நான் மகளிர் திட்டத்தில் வங்கி ஒருங்கிணைப்பாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 31.07.2021 அன்று காலை 9.30 மணியளவில் கூத்துனூர் – ஆலத்தூர் கேட் ரோடு அருகே நூறு நாள் வேலைக்காக சென்றுக்கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரி எதிரே இருசக்கர வாகனத்தில் வந்து தான் அழைத்து செல்வதாக கூறினார். நான் வண்டியில் தம்பி என்ற முறையில் ஏறினேன். அப்போது எதிரி பாரஸ்ட் ரோட்டில் வண்டியை திருப்பினார். நான் ஏன் அந்த பாதையில் செல்கிறாய் என்று கேட்டபோது தனது அம்மா இலை கேட்டதாகவும், அந்த இலை தனக்கு தெரியாது அதை காட்டுமாறு சொல்லி வண்டியை நிறுத்தி (சாட்சி அழுதுக்கொண்டே எதிரி வண்டியை நிறுத்திவிட்டு தன்னை கையை பிடித்து இழுத்து, எனக்கு முத்தம் கொடு என்று எனது சேலை பிடித்து இழுத்து என்னிடம் தப்பா நடக்க முயற்சி செய்தார் என்று கூறினார்). அப்போது நூறு நான் வேலை திட்டத்தில்

வேலை செய்தவர்கள் எனக்கு போன் செய்தார்கள். எதிரி யாரிடமாவது இதைப்பற்றி சொன்னால் உன்னை அசிங்கப்படுத்திவிடுவேன் என கூறி மிரட்டினார். பின்னர் இது சம்பந்தமாக பாடாலூர் காவல் நிலையத்தி புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது நான் போட்டது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.221/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.2 |
| Name | : | **செல்லதுரை** |
| Father's Name/Husband Name: | | **தங்கவேல்** |
| Village | : | **கூத்தனூர்** |
| Taluk | : | **ஆலத்தூர்** |
| Age | : | 42/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.06.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பி.காம் படித்துள்ளேன். நான் எம்.ஆர்.எப் கம்பெனி கேண்டினில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 31.07.2021 ம் தேதி நான் பணியில் இருந்தபோது எனது மனைவி எனக்கு போன் செய்து நூறு நாள் வேலைக்கு சென்றபோது வழியில் ஆஜர் எதிரி நான் அந்த வழியாகதான் செல்கிறேன் என் வண்டியில் ஏறு என்ற கூப்பிட்டபோது எனது மனைவியும் தம்பி என்ற முறையில வண்டியில் ஏறினார். இடையில் முள்காட்டு பகுதியில் வண்டியை நிறுத்தி எதிரியின் அம்மா ஒரு தழை கேட்டதாகவும், அது தனக்கு தெரியாது என்றும் அதை காட்டுமாறு கேட்டபோது தனது மனைவி அந்த தழை எனக்கு தெரியாது என்று கூறியுள்ளார். அப்போது எதிரி எனது மனைவியின் கையை பிடித்து இழுத்து முத்தம் கொடு என்று கூறியதாக எனது மனைவி என்னிடம் சொன்னார். பின்னர் எனது மனைவி பணி செய்யும் இடத்திலிருந்து போன் வந்தபோது இதைபற்றி யாரிடமும் சொல்லக்கூடாது என்று

எனது மனைவியை மிரட்டியதாக எனது மனைவி கூறினார். அதன் பின்னர் நான் மனைவியை போலீசில் புகார் கொடுக்க சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2.எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.221/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | ஜெயந்தி |
| Father's Name/Husband Name: | முருகேசன் |
| Village : | கூத்தனூர் |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 42/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.06.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 31.07.2021 ம் தேதி நாங்கள் நூறு நாள் வேலைக்கு சென்றோம். அப்போது எங்களையும் புஷ்பராணியையும் தனித்தனியே பிரித்து வேலை செய்ய அனுப்பினார்கள். நான் கோவில் பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். புஷ்பராணி ஆலத்தூர் கேட் போகும் வழியில் வேலை செய்து கொண்டிருந்தார். புஷ்பராணி வேலைக்கு போகும்போது ஆஜர் எதிரி எதிரே வண்டியில் வந்துள்ளார். ஆஜர் எதிரி நான் அந்த வழியாகதான் செல்கிறேன் என் வண்டியில் ஏறு என்ற கூப்பிட்டபோது எனது மனைவியும் தம்பி என்ற முறையில வண்டியில் ஏறினார். இடையில் முள்காட்டு பகுதியில் வண்டியை நிறுத்தி எதிரியின் அம்மா ஒரு தழை கேட்டதாகவும், அது தனக்கு தெரியாது என்றும் அதை காட்டுமாறு கேட்டபோது புஷ்பராணி அந்த தழை எனக்கு தெரியாது என்று கூறியுள்ளார். அப்போது எதிரி

புஷ்பராணியின்  கையை பிடித்து இழுத்து முத்தம் கொடு என்று கூறியுள்ளார்.  பின்னர் புஷ்பராணி  எனக்கு போன் செய்து என்னிடம் மேற்படி சம்பவம் பற்றி கூறினார். பின்னர் நானும், அவரது கணவரும், எனது நாத்தனார் மகனும் சேர்ந்து புஷ்ராணியை புகார் கொடுக்க சொல்லி அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை**

2. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க  குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.